| O.S.No. 76/2024 | PW1: திருமதி. விண்ணரசி<br>க/பெ. திரு. டோமினிக் சேவியர் | 22-09-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :**

1. நான் தாவா சொத்தில் அனுபத்தில் இல்லை என்றாலும், 16.02.2024 தேதியன்று தாவா சொத்தில் பிரதிவாதி உரிமை கோரியபிறகுதான் கோர்ட் சுவாதீனம் எடுத்த விஷயம் எனக்கு தெரிந்தது என்று பொய்யாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தின் மூலம் பிரதிவாதி சுவாதீனம் அடைந்தபோது நான் நிலத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான், பயிர் வைப்பவர்கள் நீதிமன்றத்திலிருந்து வந்திருப்பதாக சொன்னார்கள். பயிர் வைப்பவர்கள் பெயர் செந்தில், ஆனந்தன் ஆகும். செந்தில் சொல்லும் போது நான் பாண்டியில் இருந்தேன்.

2. பிரதிவாதி சுவாதீனம் கோரி தாக்கல் செய்த நிறைவேற்று மனுவில் ஆட்சேபணை ஏதேனும் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை, அதற்காகத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிக்கு நோட்டீஸ் ஏதேனும் கொடுத்தீர்களா என்றால் இல்லை. எனக்கு கிரையம் கொடுத்த பாபு என்பவர் பெயரில் தாவா சொத்திற்கான பட்டா இருந்தது, அதை பார்த்து வில்லங்கம் போட்டுதான் வாங்கினோம். பயிர் வைத்தால் சாகுபடி அடங்கலில் பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். நாங்கள் பயிர் வைத்தோம் என்பதற்கு சாகுபடி அடங்கல் ஏதேனும் பெற்று தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிரையம் வாங்கும் சொத்தில் கலன் ஏதும் இல்லை என்றும், அவ்வாறு இருந்தால் எனது சொந்த செலவில் அதனை தீர்த்து வைக்கிறேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால்

சரிதான், அது பொதுவாக சொல்லப்படும் விஷயம் ஆகும். வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7 ஆவணங்களிலும் மேற்கண்ட வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி தெரிந்ததற்கு பிறகு பாபுவிற்கு அறிவிப்பு ஏதேனும் கொடுத்தீர்களா என்றால் நான் அனுபவித்து வந்ததால் கொடுக்கவில்லை. நீதிமன்ற நடவடிக்கைகள் இருந்ததை தொடர்ந்து விமலா கிருஷ்ணமூர்த்தி பாபுவிற்கு விற்பனை செய்தது குறித்து பாபுவிடம் அந்த வழக்கு பற்றியும், நிறைவேற்று மனு பற்றியும் கேட்டீர்களா என்றால் கேட்கவில்லை.

4. ரூ.2,60,000/- கொடுத்து கிரையம் வாங்கினேன். வா.சா.ஆ.1 ஆவணமானது ரூ.2,70,000/-த்துக்கு கிரையம் வாங்கியதாக எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 ஆவணத்தில் ரூ.2,93,000/- மதிப்பு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். விமலா கிருஷ்ணமூர்த்தி ஏற்னவே அ.வா.எண். 373/2006 வழக்கு மற்றும் நிறைவேற்று மனுவில் தரப்பினராக இருந்து அதனை மறைத்து பாபுவிற்கு மோசடியாக நாமகார்த்த கிரைய ஆவணம் பாபு பெயரில் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல, அந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. விமலா கிருஷ்ணமூர்த்தி சொத்தை விற்பனை செய்தது குறித்து தெரிவித்திருந்தால் பாபுவையும், அவரிடம் கிரையம் பெற்ற என்னையும் பிரதிவாதி தாக்கல் செய்த மேற்படி வழக்கில் தரப்பினராக சேர்த்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. விமலா கிருஷ்ணமூர்த்திக்கு கிரையம் ஏற்பட்டது மட்டுமே பிரதிவாதிக்கு தெரியும் என்றாலும், விமலா கிருஷ்ணமூர்த்தி பாபுவுக்கு கிரையம் கொடுத்ததும், பாபு எனக்கு கிரையம் கொடுத்த விஷயம் பிரதிவாதிக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

5. வா.சா.ஆ.5 தான செட்டில்மெண்ட் நாமகார்த்தமானது என்றாலும், ஆச்சாரத்திற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.6 கிரைய ஆவணமும் நாமகார்த்தமானது என்றாலும், ஆச்சாரத்திற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. பவானி, பவானியின் கணவர் விமலா கிருஷ்ணமூர்த்தி, பாபு, நான் ஆகியோர் சேர்ந்து மோசடியாக கிரைய ஆவணத்தை உருவாக்கியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. என் சார்பாக பாபு சாட்சியம் அளிப்பார்.

6. பவானி, விமலா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஏற்படுத்திய ஆவணங்கள் உண்மையாக இருந்திருந்தால் அ.வ.எண். 373/2006 வழக்கிலேயே ஆஜராகி வழக்கினை நடத்தியிருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. பாபுவிற்கு விமலா கிருஷ்ணமூர்த்தி எழுதி கொடுத்த அசல் ஆவணத்தை என்னிடம் கொடுத்துவிட்டார். பாபு பெயரில் விமலா கிருஷ்ணமூர்த்தி பெயரில் இதுவரை பட்டா மாறவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண். 373/2006 வழக்கினை செல்லாது என அறிவிக்க கோரி வழக்கு தாக்கல் செய்யாமல் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லாது என்றாலும், தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், அந்த பரிகாரங்கள் சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல. என்னுடைய வழக்கு காலாவதியானது என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

7. நான் கிரையம் பெற்ற சொத்துக்களில் முன் கிரைய பத்திரங்கள் மற்றும் நான் கிரையம் பெற்ற பத்திரம் பெயரளவிற்கு மட்டுமே ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்றாலும் சரியல்ல. நான், பாபு ஆகியோர் விமலா கிருஷ்ணமூர்த்தியிடம் கிரையம் பெற்ற கிரையம் நல்ல எண்ணத்தின்பேரில் பெற்ற கிரையம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் எனது வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.09.22 14:25:34 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**

**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.</u>**

**<u>O.S.No.76/2024</u>**

| | |
|---|---|
| வாதி தரப்பு சாட்சி | **வா.சா. 2** |
| பெயர் | திரு. செந்தில்குமார் |
| தந்தை பெயர் | திரு. சம்பத் |
| கிராமம் | திருமணி |
| வட்டம் | செய்யாறு |
| தொழில் | விவசாயம் |
| வயது | 55 |

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

1. நான் இந்த வழக்கில் வாதி தரப்பில் 2–ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். ஆவணங்கள் – இல்லை.

**<u>குறுக்கு விசாரணை</u> :**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.09.22 14:25:22 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**